ஸ்ரீ:

ப்லவ ஸூ மாசி மீ
பிப்ரவரி - மார்ச் 2022

மலர்: 4
இதழ்: 11

ஸ்ரீ அலர்மேல்மங்கா நாயிகா ஸமேத ஸ்ரீ ஸ்ரீநிவாஸ பரப்ரஹ்மணே நம:
ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேஸிகாய நம:

# தேஸிக ஸந்தேஸம்





MONTHLY NEWSLETTER FROM:

## SRI VEDANTHA DESIKAR DEVASTHANAM

MYLAPORE, CHENNAI, Tel: 044 - 24953799, 044 - 43863747
Email: svdd.mylai@gmail.com, web: www.svdd.com





தை வெள்ளிக்கிழமை - தாயார் கஜலக்ஷ்மி வாஹனம்





ஸ்ரீ:
ப்லவ ஸூ மாசி மீ
பிப்ரவரி - மார்ச் 2022
மலர்: 4
இதழ்: 11

ஸ்ரீ அலர்மேல்மங்கா நாயிகா ஸமேத ஸ்ரீ ஸ்ரீநிவாஸ பரப்ரஹ்மணே நம:
ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேஸிகாய நம:

# தேஸிக ஸந்தேஸம்

## திருக்கோவில் பூஜா காலங்கள் *

### காலை

| ஞாயிறு முதல் புதன் வரை | | | வியாழன் முதல் சனி வரை | | |
|---|---|---|---|---|---|
| 6.30 | - | விச்வரூபம் | 6.00 | - | விச்வரூபம் |
| 8.30 | - | திருவாராதனம் | 7.30 | - | பொது தரிசனம் |
| 9.45 | - | சாற்றுமுறை | | | |

12.00 - உச்சிகாலம்

### மாலை

4.00 - ஸந்நிதி திறப்பு, 7.30 - திருவாராதனம், 9.00 - சயனம்

* விசேஷ காலங்களில் மாறுதலுக்கு உட்பட்டது

**தர்மகர்த்தாக்கள்:**

ஸ்ரீ அழிசூர் R. ராகவன் | ஸ்ரீ R. அனந்தபத்மநாபன் | ஸ்ரீ R. முகுந்தன்

**Editorial Board :**
ஸ்ரீ நெல்வாய் ஸௌம்யநாராயணாசார்யர் ஸ்வாமி - ஆசிரியர்
ஸ்ரீ நாட்டேரி ஸ்ரீஹரி (எ) லக்ஷ்மீந்ருஸிம்ஹாசார்யர் ஸ்வாமி
ஸ்ரீ நாவல்பாக்கம் ரங்கநாதாசார்யர் ஸ்வாமி
ஸ்ரீ ஸ்ரீபெரும்பூதூர் ஸத்யநாராயணாசார்யர் ஸ்வாமி

**Photo Courtesy:** M.K.S. Mohan Babu, P.S. Anand & Thillai Ranganathan
Published by: ஸ்ரீ வேதாந்த தேசிகர் தேவஸ்தானம், மயிலாப்பூர், சென்னை-4
Printed by: Abisan Enterprises Chennai - 87, Cell : 95000 45604
Designed: ye**SK**ay designs



**ஸ்ரீ வேதாந்த தேசிகர் தேவஸ்தானம்**
மயிலாப்பூர், சென்னை - 600004. போன்: 044 - 24953799, 43863747
Website: www.svdd.com Email: svdd.mylai@gmail.com



ஶ்ரீ:

# ஆசிரியர் விண்ணப்பம்

வேங்கடாத்3ரி ஸமம் ஸ்தா2நம் ப்3ரஹ்மாண்டே3 நாஸ்தி கிஞ்சந |
வேங்கடேஶ ஸமோ தே3வோ ந பூ4தோ ந ப4விஷ்யதி ||

வேங்கடத்தைப் பதியாக வாழ்வீர்காள்!

மாதங்களில் சில, ஆழ்வார்களால் தங்கள் பாசுரங்களில் கையாளப்பட்டுப் பெருமை பெற்றவை – உதாரணத்துக்கு, மார்கழி / தை போன்றவை கோதைப் பிராட்டியின் திருவாக்கால் புனிதமடைந்தவை. அதேபோன்ற பெருமை மாசி மாதத்துக்கும் உண்டு. இதோ அப்பேற்றையளித்த ஸ்வாமி தேசிகனின் ‘நவமணி மாலை’ப் பாசுரம்:

தேசொத்தார் இல்லை எனும் தெய்வநாயகனார்
வாசக்குழல் மாமலராள் மணவாளர்
வாசித் தொழும் மன்மதனார் மணல் தோப்பில்
மாசிக் கடலாடி மகிழ்ந்து வருவாரே (4)

தேவநாயக பஞ்சாசத்தில் அடியவர்க்கு மெய்யனின் ஸௌந்தர்யசோபையை வர்ணித்த ஸ்வாமி, இங்கு அன்னாரின் ஒட்டுமொத்த அழகை (ஸமுதாய சோபை) அநுபவிக்கிறார். தன் திருமேனி அழகு, அவர்க்கே மகிழ்ச்சி தருவதாக மிளிர்கிறது. எந்த ஸந்தர்ப்பத்தில் எனில், ‘‘மாகாத்யா: பஞ்ச வஸந்தா:’’ எனப் போற்றப்படும் மாசி மாத மகத்தன்று வஸந்தகால விஹிதமான ஜலக்ரீடை கண்டருள கடலில் நீராடி, அதன் மணல் தோப்பில் விளையாடி வரும்போது.

இங்கு தேவநாதனைக் குறிப்பிட்டது லக்ஷணை எனக்கொண்டு, வேங்கடத்து எம்பெருமானையும் கூட்டிக்கொள்ளலாம். அல்லது, ஸ்வாமி தேசிகனுக்கு அனவரதம் ஸேவை ஸாதித்துக்கொண்டிருக்கும் திருமயிலை வேங்கடவனையே நேராகச் சொல்வதாகக் கொள்ளலாம். எப்படியெனில் வேங்கடவனும் ‘எண்ணில் தொல்புகழ் வானவர் ஈசனே’ (தேவநாதன்தானே) !

வட திருவேங்கடம், தெண்ணிறைச் சுனை நீர் கொண்டது எனில், மாமயிலைத் திருவேங்கடம், திரை கடலாம் வங்கத்தை தன்னகத்தே கொண்டது. மயிலையைப் பதியாக வாழும் நமக்கு, இவ்வுத்ஸவத்தை நடத்தி ஸேவிக்கும் பாக்யம், இதோ! இன்னும் நான்கு நாட்களில் கிட்டப் பெறுவோம். வேங்கடவன், வங்கக் கடலில் மயிலைத் துறையில் நீராடி, தீர்த்தம் ப்ரஸாதித்து, திருமணல் தோப்பில் களித்து நிற்கும்படி!

இத்துணை பெருமை அனைத்தும் மாசிக்கே.

கண்ணுக்கு விருந்தாகும் வண்ணப் படங்கள் மற்றும் கருத்துக்கு விருந்தாகும் கவின்மிகு கட்டுரைகளுடன் மாசி இதழ் உங்கள் கையில்!

ஸ்ரீ:

# Veethi Purappadu Resumes In All Its Splendour

## TRUSTEES' NOTE

The month of Maasi is considered as an auspicious one. Maasi-Pournami – generally known as Maasi-Magham though the two could fall on adjacent days once in a few years – is a significant annual festival celebrated in numerous temples. This Utsavam involving Theerthavaari, held on a full moon day in Maasi, is a famous one in Divyadesams like Srirangam, Thirukkudandhai, Thiruvaheendra Puram, Thirukkovalur, Thirukkadal Mallai and Thiruvallikkeni, to name a few. In fact, in Thirukkovalur, Lord Dehaleesan covers a distance of about 75 kilometres to reach Cuddalore for this festival.

In our temple, the Utsavam featuring purappadu and Samudra Snanam at 'Vanga-kadal' is held on the concluding day of the three-day festival Dhavanotsavam which is performed with music concerts on each day.

Besides, Thiru-kachi Nambigal Satrumurai and Kulasekhara Azhwar Satrumurai are some other important festivals of the month. Special events like Annakoota Utsavam and Laksharchanai to Sri Hayagrivar are also taking place during the month.

Meanwhile, we are happy to inform that 'Veethi Purappadu' has resumed in all its splendour after a gap of 10 months, starting with Bhogi Utsavam. Sankranthi Utsavam, Adhyayana Utsavam/Irapathu Satrumurai (Nammazhwar Thiruvadi Thozhal), Pallandu Thodakkam, Paarivettai Utsavam, Vanabhojanam Utsavam and Ratha Sapthami all followed in that order and were celebrated with customary verve.

We are hopeful of continuing the outside processions on all utsavams in a seamless way. Though the pandemic is on the decline, the adherence to Covid protocols will continue to be mandatory at the temple.

Also, we would like to put on record a little milestone that Venkatesa Theertham has reached. The facility, which was inaugurated during January last year, has completed one year, and been serving the Asthikas the way it was envisaged to. We once again thank the donors who made the much-needed facility a reality.



# ப்லவ வருட மாசி மாத பஞ்சாங்கம்

| ஆங்கில தேதி | தமிழ் தேதி | திதி | வாரம் | நக்ஷத்ரம் | உத்ஸவம் | உபயம் |
|---|---|---|---|---|---|---|
| பிப்ரவரி / மார்ச் | மாசி | | | | | |
| 13/02/22 | 1 | த்வாதசி | ஞாயிறு | திருவாதிரை | மாசி மாதப் பிறப்பு – பெருமாள் உத்ஸவர் திருமஞ்சனம், மாலை புறப்பாடு | ஸ்ரீ அத்திகிரி அருளாளன் |
| 14/02/22 | 2 | த்ரயோதசி | திங்கள் | புனர்வஸு | தவனோத்ஸவம் 1ம் நாள் – காலை பெருமாள், தாயார் திருமஞ்சனம். மாலை பெருமாள், தாயார் வெள்ளி ஊஞ்சலில் ஆஸ்தானம் | ஸ்ரீ P.R. ஸ்ரீநிவாஸன் |
| 15/02/22 | 3 | சதுர்தசி | செவ்வாய் | புஷ்யம் | தவனோத்ஸவம் 2ம் நாள் – காலை பெருமாள், தாயார் திருமஞ்சனம். மாலை பெருமாள், தாயார் வெள்ளி ஊஞ்சலில் ஆஸ்தானம் | ஸ்ரீ V. நரஸிம்ஹன் – ஸ்ரீ V. உப்பிலியப்பன் |
| 16/02/22 | 4 | பௌர்ணமி | புதன் | ஆயில்யம் | தவனோத்ஸவம் 3ம் நாள் – காலை பெருமாள் சமுத்திரத்திற்கு எழுந்தருளல். தீர்த்தவாரி. காலை பெருமாள், தாயார் திருமஞ்சனம். மாலை பெருமாள், தாயார் வெள்ளி ஊஞ்சலில் ஆஸ்தானம் | மாசிமகம் – ஸ்ரீ A. ஸ்ரீநிவாஸன். தவனோத்ஸவம் – ஸ்ரீ ஸ்ரீநிவாஸன் நரசிம்ஹன் |
| 17/02/22 | 5 | ப்ரதமை | வியாழன் | மகம் | ஸ்ரீ திருமழிசைப் பிரான் | |
| 18/02/22 | 6 | த்விதீயை | வெள்ளி | பூரம் | பெருமாள், தாயார் மூலவர் தாயார் உத்ஸவர் திருமஞ்சனம். மாலை உள் புறப்பாடு | V. சேஷாத்ரி குடும்பத்தார் |
| 19/02/22 | 7 | த்ருதீயை | சனி | உத்தரம் | தாயார் உத்ஸவர் திருமஞ்சனம். மாலை உள் புறப்பாடு | S.V.S. ராகவன் பண்ட் |
| 20/02/22 | 8 | சதுர்த்தி | ஞாயிறு | ஹஸ்தம் | காலை பெருமாள், தாயார், ஸ்வாமி தேசிகன் திருமஞ்சனம். அன்னக்கூட உத்ஸவம். மாலை பெருமாள், ஸ்வாமி தேசிகன் புறப்பாடு, பின்பு தாயாருடன் உள்புறப்பாடு, ஊஞ்சல். | ஸ்ரீ ஸ்ரீநிவாஸப் பெருமாள் வேதாந்த தேசிகர் கைங்கர்ய ட்ரஸ்ட் |
| 21/02/22 | 9 | பஞ்சமி | திங்கள் | சித்திரை | ஸ்ரீ மதுரகவியாழ்வார் | |
| 22/02/22 | 10 | ஷஷ்டி | செவ்வாய் | ஸ்வாதி | காலை லக்ஷ்மிநரசிம்ஹர் மூலவர், உத்ஸவர் திருமஞ்சனம். மாலை ஆஸ்தானம | |
| 23/02/22 | 11 | ஸப்தமி | புதன் | விசாகம் | ஸ்ரீநம்மாழ்வார் | |
| 24/02/22 | 12 | அஷ்டமி | வியாழன் | அனுஷம் | ஸ்ரீ நாதமுனிகள் | |
| 25/02/22 | 13 | நவமி | வெள்ளி | கேட்டை | காலை பெருமாள், தாயார் மூலவர் தாயார் உத்ஸவர் திருமஞ்சனம். மாலை தாயார் உள் புறப்பாடு | சரோஜா க்ருஷ்ணஸ்வாமி குடும்பத்தார் |
| 26/02/22 | 14 | தசமி | சனி | மூலம் | திருமால்வடை | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 27/02/22 | 15 | ஏகாதசி / த்வாதசி | ஞாயிறு | பூராடம் / உத்தராடம் | ஏகாதசி – காலை பெருமாள் உத்ஸவர் திருமஞ்சனம் – மாலை புறப்பாடு | திருக்கண்ணமங்கை ஸ்ரீ தேவநாதாசார்யர் குடும்பத்தினர், C/o. ஸ்ரீ காகுஸ்தன் |
| 28/02/22 | 16 | த்ரயோதசி | திங்கள் | ச்ரவணம் | காலைபெருமாள், தேசிகன் திருமஞ் சனம். மாலை புறப்பாடு, ஆஸ்தானம், ஸேவாகாலம், சாற்றுமுறை | ஸ்ரீ T.C. ஸ்ரீநிவாஸன் |
| 01/03/22 | 17 | சதுர்த்தசி | செவ்வாய் | அவிட்டம் | ஸ்ரீ பூதத்தாழ்வார் | |
| 02/03/22 | 18 | அமாவாசை | புதன் | சதயம் | காலை பெருமாள் திருமஞ்சனம், மாலை பெருமாள், புறப்பாடு | ஸ்ரீ N.R.S. ஸ்ரீ ராமன் |
| 03/03/22 | 19 | ப்ரதமை | வியாழன் | பூரட்டாதி | திருமால்வடை | |
| 04/03/22 | 20 | த்விதீயை | வெள்ளி | உத்தரட்டாதி | பெருமாள், தாயார் மூலவர் தாயார் உத்ஸவர் திருமஞ்சனம். மாலை தாயார் உள் புறப்பாடு | T.V.S. மோட்டார் கம்பெனி லிமிடட் |
| 05/03/22 | 21 | த்ருதீயை | சனி | ரேவதி | லக்ஷ்மி ஹயக்ரீவர் திருமஞ்சனம் | ஸ்ரீ R. முகுந்தன், ஸ்ரீ B. ஜெகதீசன், ஸ்ரீ ராம்கான்ஸ் |
| 06/03/22 | 22 | சதுர்த்தி | ஞாயிறு | அச்வினி | லக்ஷ்மி ஹயக்ரீவர் லக்ஷார்ச்சனை | |
| 07/03/22 | 23 | பஞ்சமி | திங்கள் | பரணி | திருமால்வடை | |
| 08/03/22 | 24 | ஷஷ்டி | செவ்வாய் | பரணி / க்ருத்திகை | திருமால்வடை | |
| 09/03/22 | 25 | ஸப்தமி | புதன் | க்ருத்திகை / ரோஹிணி | ஸ்ரீ திருமங்கையாழ்வார் | |
| 10/03/22 | 26 | அஷ்டமி | வியாழன் | ரோஹிணி | ஸ்ரீ கண்ணன், ஸ்ரீ திருப்பாணாழ் வார் ஆஸ்தானம் | |
| 11/03/22 | 27 | நவமி | வெள்ளி | ம்ருகசீர்ஷம் | ஸ்ரீ திருக்கச்சி நம்பிகள் திரு நக்ஷத்ரம். காலை பெருமாள், தாயார் திருக்கச்சி நம்பிகள் திருமஞ்சனம். மாலை தாயார் உள் புறப்பாடு, பிறகு பெருமாள், திருக்கச்சி நம்பிகள் புறப்பாடு, ஆஸ்தானம், ஸேவாகாலம், சாற்றுமுறை | ஸ்ரீ உ.வே. அழிசூர் ஸ்ரீநிவாஸாசார்யர் |
| 12/03/22 | 28 | நவமி / தசமி | சனி | திருவாதிரை | ஸ்ரீ பாஷ்யகாரர் | |
| 13/03/22 | 29 | தசமி | ஞாயிறு | புனர்வஸு | குலசேகர ஆழ்வார் திருநக்ஷத்ரம். காலை பெருமாள், ஆழ்வார் திருமஞ்சனம், மாலை புறப்பாடு, ஸேவாகாலம், சாற்றுமுறை | திருமஞ்சனம் – ஸ்ரீ T.C. ரங்கராஜன் குடும்பத்தினர். C/o. ஸ்ரீ R. சுந்தர். புறப்பாடு, சாற்றுமுறை – ஸ்ரீநிதி மோஹன் |
| 14/03/22 | 30 | ஏகாதசி | திங்கள் | புஷ்யம் | பங்குனி மாதப்பிறப்பு. காலை பெருமாள் உத்ஸவர் திருமஞ்சனம். மாலை புறப்பாடு | ஏகாதசி – ஸ்ரீ உ.வே. அழிசூர் ஸ்ரீநிவாஸா சார்யர் – ஸ்ரீராகவன். மாதப் பிறப்பு – M. ஐயப்பன் |

ஸ்ரீ:

# பத்துவிளி பத்தர்

ஸ்ரீ உ.வே. புதுஅக்ரஹாரம் S. பார்த்தஸாரதி ஸ்வாமி, பெங்களூரு

நம் ஸம்ப்ரதாயத்தில் கொண்டாடப்படும் பன்னிரு ஆழ்வார்களில் இருவர் மட்டுமே வடமொழியில் க்ரந்தங்களை ஸாதித்துள்ளார்கள். ஒருவர் **கல்பஸூத்ர** வ்யாக்யானமிட்ட **ஸ்ரீபெரியாழ்வார்.** அடுத்தவர் **முகுந்தமாலா** என்கிற ஸ்தோத்ரத்தை அருளிய **ஸ்ரீ குலசேகரப்பெருமாள்.** நாற்பது அழகான ச்லோகங்களைக் கொண்டு இந்த முகுந்தமாலையை ஆழ்வார் தொடுத்துள்ளார். தொடுத்துள்ளார் என்று சொன்னதினாலேயே தெரியும், ஒவ்வொரு ச்லோகத்தின் விஷயமும் முன் ச்லோகத்தோடு ஸம்பந்தமுள்ளதாக இருக்கும் என்பது.

முகுந்தமாலா என்ற ஸம்ஸ்க்ருதத் திருநாமம் முகுந்தஸ்ய மாலா என்று விரிந்து மோக்ஷத்தை அளிப்பவனான முகுந்தனுக்கு (ஸமர்பிக்கப்படும்) மாலை என்று பொருள் கொடுக்கும். ஒவ்வொரு ச்லோகத்திலும் அதிலுள்ள சொற்களின்/சொற்றொடர்களின் பொருளும் இயல்பாகவே இயைந்து ஒரு மாலையைப் போல இத்துதிநூலை ஆழ்வார் அமைத்துள்ளார். இதற்காகவே முகுந்தன் விஷயமான இந்த ச்லோகத்திற்கு முகுந்தமாலா என்ற திருநாமத்தை ஆழ்வார் இட்டார் எனலாம்.

இதன் மூன்றாவது ச்லோகத்தில் **முகுந்த மூர்த்நா ப்ரணிபத்ய யாசே பவந்தமேகாந்தமியந்தமர்த்தம்| அவிஸ்ம்ருதிஸ்-த்வச்-சரணாரவிந்தே பவே பவே மேகுஸ்து பவத்-ப்ரஸாதாத்||** (ஏ முகுந்தனே! தேவரீரைத் தலையினால் ஸாஷ்டாங்கமாக நமஸ்காரம் செய்து ரஹஸ்யமான இந்த அர்த்தத்தை யாசிக்கின்றேன். அது என்னவெனில், தேவரீரது திருவடித் தாமரைகளிலே மறப்பின்மையாய் இருப்பது. தேவரீருடைய அனுக்ரஹத்தால் ஒவ்வொரு ஜன்மத்திலும் இது உண்டாகவேண்டும்) என்று வேண்டுவதால் நாம் இதை உணர்ந்து கொள்ளலாம்.

இப்படி தொடுக்கப்பட்ட இந்த முகுந்தமாலையில் இருபத்தியொன்றாம் பாசுரத்தில் எம்பெருமானை பத்து விதமாக விளித்துத் தன்னை ரக்ஷிக்கவேண்டும் என்ற ப்ரார்த்தனையை வைக்கிறார். அந்தப்பாசுரத்தில் குலசேகராழ்வார் எம்பெருமானை விளித்துள்ள பத்து விளிகளைத்தான் இந்தக் கட்டுரையில் அனுபவிக்கப் போகிறோம். முதலில் அந்த ச்லோகத்தைப் பார்ப்போம்.

*ஹே கோபாலக! ஹே க்ருபாஜலநிதே! ஹே ஸந்துகந்யாபதே!*
*ஹே கம்ஸாந்தக! ஹே கஜேந்த்ரகருணாபாரீண! ஹே மாதவ!|*
*ஹே ராமானுஜ! ஹே ஜகத்த்ரயகுரோ! ஹே புண்டரீகாக்ஷ! மாம்*
*ஹே கோபீஜநநாத! பாலய பரம் ஜாநாமி ந த்வாம் விநா||*

இனி இதில் குலசேகராழ்வார் எம்பெருமானை விளித்துள்ள விளிகளை ஒவ்வொன்றாய் அனுபவிப்போம். ஆண்டாள் கண்ணனை நாச்சியார் திருமொழியில் பாடும் பொழுது **இட்டமான பசுக்களை இனிது மறித்து நீரூட்டி விட்டுக்கொண்டு விளையாட விருந்தாவனத்தே கண்டோமே** என்று அனுபவித்தாள். நம்மாழ்வாரும் கோவர்தன-உத்தரணம் செய்து ரக்ஷித்ததைப் பாடும் பொழுது **இன ஆநிரைபாடி அங்கே ஒடுங்க அப்பன் தீமழை காத்துக் குன்றமெடுத்தானே** என்று ஆநிரைகளைக் காத்ததைக் கொண்டாடுகிறார். இப்படிக் கொண்டாடப்படும் இந்த கோரக்ஷண வ்ருத்தாந்தம் இவருக்கும் நினைவில் வர **ஹே கோபாலக** என்று முதலில் விளிக்கிறார். அறிவில்லாத பசுக்களை மேய்த்தும், நீரூட்டியும், மலையை எடுத்தும் நீ ரக்ஷணம் செய்யவில்லையா? காப்பாற்று என்று சொல்லக்கூடத் தெரியாத பசுக்களைக் காத்த நீ, காப்பாய் என்று கூவும் என்னை ரக்ஷித்தால் என்ன? என்ற பொருள்பட விளிக்கிறார்.

உம்மை ரக்ஷிப்பதால் என்ன ப்ரயோஜனம் என்று எம்பெருமான் வினவ, தேவரீருக்கு என்னால் கிடைக்கப்பெறுவது என்று ஏதும் உண்டோ? நீரே அவாப்தஸமஸ்தகாமனானவன். இருந்தும் நீரோ ஸமுத்ரம் ஜலங்களுக்கெல்லாம் நிதியாக இருப்பது போல் கருணைக்கெல்லாம் நிதியாகவுள்ளீர். ஆதலால் தேவரீரிடத்தில் நிரம்பியிருக்கின்ற கருணையால் மட்டுமே காக்க வேண்டும் என்று **ஹே க்ருபாஜலநிதே** என்றார். வாத்ஸல்யம் காருண்யம் என்ற எம்பெருமானின் இரண்டு குணங்களைக் காட்டுவதற்காக இவ்வாறு முதல் இரண்டு விளிகளை இடுகிறார்.

அடுத்து எம்பெருமான் ஆழ்வாரைப் பார்த்து நீர் அனுபவிக்கும்படியான போக்யங்கள் என்னிடம் உண்டோ? என வினவ, என்ன அவ்வாறு வினவினீர்? எனக்குமட்டுமின்றி அந்தப் பிராட்டிக்கே நீர்தான் பரம போக்கியம். அம்ருதமதனம் பண்ணுகையில் அவதரித்த பிராட்டியார் தேவர்கள் அனைவரும் பார்த்திருக்கும் காலத்திலேயே அன்றோ தேவரீரின் திருமார்பை வந்தடைந்தாள். ஆதலால் பரம போக்யபூதர் நீரே என்ற கருத்தில் அவரை **ஹே ஸிந்துகன்யாபதே!** என்று அடுத்ததாக விளித்தார்.

பரமபோக்யரான நீர் பக்கத்திலிருக்கும் போதே, பசித்திருக்கும் குழவி தாயைக் குறித்து கதறுவதுபோல, அனுபவிக்கத் துடிக்குத் கதறுகிறேன் என்ற பொருளில் ஆழ்வார் கூற, எம்பெருமான் பாபங்கள் கழிந்தாலன்றோ எம்மை அனுபவிப்பது என்று கேட்க அடுத்து கம்ஸனை நிரஸித்ததைப் போல என் பாவங்களையெல்லாம் நீர்தானே நசிப்பிக்கக்

கூடாதோ என்ற கருத்து த்வனிக்க **ஹே கம்ஸாந்தக!** என்றழைத்தார். முகுந்தனே! உமக்கு மாமன் என்கின்ற உறவுமுறை இருந்தபோதிலும் ஸாதுபரித்ராணத்தின் பொருட்டு கம்ஸனைக் கொன்றீர். என்னிடம் அந்தவிதமான உறவுமுறை இல்லாததால் உமக்கு வேலை ஸுலபமாயிற்று. என்னை நலிவிக்கும் என்வினைகளை ஏன் நாசம் செய்யக்கூடாது, கேவலம் க்ருபையாலே, பசுக்களை ரக்ஷித்ததைப்போல என்னயும் ரக்ஷியும் என்று கேட்கிறார்.

எம்பெருமானும் எனக்கு பால் தயிர் வெண்ணெய் மீதெல்லாம் அளவுக்கதிகமான ஆசை; அதற்காக என்னவேண்டுமானாலும் செய்வேன்; உம்மைக் காப்பதினால் கிடைக்கப்போவது என்ன? என்று கேட்க குலசேகராழ்வார் அடுத்து ஒரு விளியொடு எம்பெருமானை நோக்கி **ஹே கஜேந்த்ரகருணாபாரீண!** எம்பெருமானே! கஜேந்த்ராழ்வான் பக்கலில் மிக்க கருணையோடு இருந்தாய். அவனிடத்தில் முழுக் கருணையையும் காட்டினாய்! விரோதியான முதலையைக் கொன்று அவனைக் காத்தாய்! அதுபோல் என் பாபங்களையும் நசிப்பித்து என்னைக் காக்கக் கூடாதோ?

கஜேந்த்ராழ்வான் ஆதிமூலமே என்று கதறும் பொழுது, மற்றைத் தேவர்களெல்லாம் **நாஹம் நாஹம் ந சாஹம்** என்று கைவாங்க, ஸர்வகாரணபூதரான நீர் ஸேநாதிபதியாழ்வாரால் கைலாகு கொடுக்கப்படாமலும், பாதுகை சாற்றிக்கொள்ளாமலும், அந்தப்புர ஸ்த்ரீகள் இதென்ன பரபரப்பு என்று வியக்கும்படியாகவும், பெரிய திருவடிக்கு அலங்காரம் செய்யாமலும் ஏறிக்கொண்டு, அவருடைய வேகம் போராமல் அவரையும் இழுத்துக்கொண்டு, வஸ்த்ராதிகளை வழக்கமாக அணிவதுபோல் அணியாமல், அரைகுலையத் தலைகுலைய, ஆனைக்காகி முதலை மேல் சீறி வந்தார் என்று அனைவரும் கொண்டாட ஓடிவந்தும், கஜேந்த்ரன் கூட்டபின்னன்றோ நாம் உதவினோம்; முற்பட உதவவில்லையே என்று வருந்தியது உன் க்ருபையை அவன்பால் காட்டியதற்கு சான்றானதன்றோ? அந்த கஜேந்த்ரன் உமக்கும் பால் கொடுத்தானா? தயிர், வெண்ணெய் என்று ஏதேனும் கொடுத்தானா? அங்கு உம்முடைய க்ருபையைத் தவிர ஒன்றையும் காணகில்லேன். அதைப் போல் என்னையும் ரக்ஷித்தருள்க! கஜேந்த்ரன் ஒரு முதலையால் பிடிபட்டான். என்னை இந்த்ரியங்கள் என்ற ஐந்து முதலைகள் பிடித்து வாட்டுகின்றது என்ற பொருளெல்லாம் உள்ளடக்கி **ஹே கஜேந்த்ரகருணாபாரீண!** என்று அழைக்கிறார்.

எம்பெருமான், கஜேந்த்ரனை உடனே ரக்ஷிக்கவில்லையே! தேவ வருஷத்தால் ஆயிரம் ஆண்டு முதலையுடன் போராடினானே என்று கூற, ஆழ்வார், அவன் தன் வல்லமையால் ஜயித்துக் கொள்ளலாம் என்று இருந்தான். நான் அப்படியில்லையே! எனக்கு



**ஸ்ரீ குலசேகரப்பெருமாள்**

உடனே அருளுவது உமக்கு அழகு, ஏனெனில் நீ மஹாலக்ஷ்மியிடம் மிகுந்த வ்யாமோஹம் கொண்டவன் என்பது எனக்குத் தெரியும். தாய்க்குத் தெரியும் குழந்தையின் கஷ்டம். அவளை முன்னிட்டு உன்னை அழைக்கிறேன். நம்மாழ்வரும் இதையே செய்தார். **சிந்தை கலங்கித் திருமால் என்றழைப்பன்** என்றார். என் சிந்தையும் கலங்கியிருப்பதால் பிராட்டியை முன்னிட்டு அழைக்கிறேன் என்று **ஹே மாதவ!** என்றழைக்கிறார்.

எம்பெருமான் இதையெல்லாம் எங்கு கற்றீர் என்று கேட்க, அடியோங்களுக்கு ஹரிவம்ஸம்தான் ப்ரமாணம். அதில் திருப்பாற்கடலை வாஸஸ்தானமாக உடைய லக்ஷ்மீபதியான இந்த நாராயணன் திருவனந்தாழ்வானாகிய திருப்பள்ளியை விட்டன்றோ இம்மதுராபுரியில் வந்து அவதரித்துள்ளான் என்று கூறப்பட்டுள்ளது. இப்படி யதுவம்சத்தில் பலராமனுக்குத் தம்பியாய் அவதரித்தது ஸாதுபரித்ராணம் செய்வதற்கன்றோ! என்ன அழகாய் கீதையை எடுத்துரைத்தீர்! ஸாதுக்களைக் காக்கவும் தீயவர்களை அழிக்கவும் தர்மத்தை நிலைநிறுத்தவும் அந்த அந்த யுகங்களில் பிறக்கிறேன் என்று சொன்ன நீரன்றோ, **ஸர்வதர்மான் பரித்யஜ்ய மாம் ஏகம் ஸரணம் வ்ரஜ | அஹம் த்வா ஸர்வபாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி மாசுச:** || என்று சரமச்லோகத்தையும் ஸாதித்துக் கிடைத்தற்கரிய விஷயத்தை எங்களுக்குக் கொடுத்தீர். ஆகையால் உம் இராமானுஜ அவதாரம் எங்களுக்கு மிகவும் உகந்தது என்று கூறி **ஹே ராமானுஜ!** என்று விளித்தார்.

எம்பெருமான் இதனால் உமக்கு என்ன பயன் என்று கேட்க, அடியேனுக்கு மட்டுமல்ல இந்த

உலகிலுள்ளார் அனைவருக்கும் அஜ்ஞானம் போயிற்று. அதுமட்டுமல்ல மூவுலகில் உள்ள அனைவருக்கும் அந்தகாரமென்ற அஜ்ஞான இருட்டு ஒழிந்தது. கு என்னும் சொல் அஜ்ஞானமாகிற இருளைக் குறிப்பதாகும். ரு என்னும் சொல் இருளைப் போக்குவதைக் குறிக்கிறது. எனவே அஜ்ஞானமாகிற இருளைப் போக்குகிறவர்கள் குரு என அழைக்கப்படுகிறார். ஆதலால் தேவரீர் மூவுலகுக்கும் குருவாகிறீர் என்று சொல்லி எம்பெருமானை **ஹே ஜகத்த்ரயகுரோ!** என்று விளிக்கிறார். இவ்விரண்டாலும் எம்பெருமானைத் தன்னுடைய அஜ்ஞான அந்தகாரத்தை நிரஸித்து ரக்ஷிக்க ப்ரார்த்திக்கிறார்.

எம்பெருமான் மேலும் ஒரு கேள்வியைக் கேட்கிறான். நான் பரதெய்வம் என்று எதைவைத்துக் கூறுகிறீர் என்று கேட்க, பரத்வம் தெளிவாகத் தெரிவது உமது தாமரைக் கண்களிலல்லவா! சாந்தோக்ய உபநிஷத் எமக்கு அதை விரித்துக் காட்டி புண்டரீகம் ஏவம் அக்ஷிணீ என்றது. உம் திருக்கண்கள் அனைவரையும் கவர்ந்திழுக்கக் கூடியவை. **ஹே புண்டரீகாக்ஷ!** உம்முடைய நீண்ட அப்பெரியவாய கண்கள் என்னைப் பேதமை செய்கின்றது என்றார்.

எம் பரத்வாதிகுணங்கள்தான் உம் நெஞ்சில் பட்டதோ என்று கேட்க பரத்வத்துடன் ஸௌசீல்யமும் கலந்து பரிமாறுவதுதான் உம் வழக்கம். இதை நீர் கோபிகைகளிடத்தில் காட்டியருளியதைக் கேள்விப்பட்டிருக்கிறோம். பரத்வம் இல்லாத ஸௌசீல்யமும், ஸௌசீல்யமில்லாத பரத்வமும் பலனளிக்காது. அது வீண். கோபிகாகீதத்தில் கதறிய கோபிகைகளுக்கு ராஸக்ரீடையில் அவர்களது உள்ளக் கருத்தறிந்து கூடி அவர்களுக்கு நாயகனானவனே! **ஹே கோபீஜநநாத!** என்றழைத்து எம்பெருமானை பரிபூர்ணமாகப் பற்றி மாம் பாலய – உம் திருநாமங்களைப் பற்றிக் கதறுகின்ற அடியேனைக் காப்பாற்றவேண்டும் என்று கூறினார்.

எம்பெருமான் என்னைக்காட்டிலும் பரனானவனைப் பற்றலாகாதோ என்று கேட்க, குலசேகராழ்வார், **த்வாம் விநா பரம் ந ஜாநாமி** –தேவரீரைத் தவிர பரனானவனாக ஒருவனை நான் எண்ணவில்லை; ஸர்வஜ்ஞனான உமக்குத்தெரிந்தால் அவனை இன்னார் என்று சொல்லிக் காட்டும். உம்மால் காட்டமுடியாதாகையால் உம்மையல்லது ரக்ஷகன் இல்லாத எம்மைக் காத்தருளவேண்டும் என்று முடிக்கிறார்.

இப்படி ஆஸ்சர்யமான பத்து விளிகளால் ஒரு மாலையைத் தொடுத்து அந்த மாலையை ஒரு பெரிய மாலையான முகுந்தமாலைக்குள் இடுகிறார் ஆழ்வார். இந்த விளிகள் ஒன்றொன்றும் காரணத்தை அடியாகக் கொண்ட விளிகள்! அவைகளை ஒன்றுக்கும் மேல் ஒன்றாக அடுக்கியதும் ஒரு அழகு! நாம் எம்பெருமானிடம் பரிபூர்ண ஸரணாகதி செய்வதற்கு இந்த பத்து விளிகள் போதுமானது. மாசிப்புனர்வசுவில் அவதரித்த புண்ணியனாம் குலசேகரப்பெருமாளை மனமிருத்தி அவரது முகுந்தமாலையை முழுவதும் அவ்வாறில்லாவிட்டால் இந்தப் பத்து விளிகளை உள்ளடிக்கிய ச்லோகத்தையாவது தினமும் அனுஸந்திப்போமாக!

*விளிபத்தினை குலசேகரன் தருகாரணம் கொண்டே*
*குளிப்பாயென குருகாட்டிட குறையேதினி குறுகாய்*
*திளைப்பாயவன் திருத்தாளடி தெவிட்டாதது திண்ணம்*
*அளிக்கின்றவன் அவனேயென அறிந்தாடிடு நெஞ்சே*

## பிள்ளையந்தாதியும் அடைக்கலப்பத்தும்

ஸ்ரீ நயினாராசார்யர் தம் தகப்பனாரும் ஆசார்யருமான ஸ்ரீமந் நிகமாந்த மஹாதேசிகன் விஷயமாக அருளிச் செய்துள்ள **பிள்ளையந்தாதியையும்,** ஸ்ரீமந் நிகமாந்த மஹாதேசிகன் கரிகிரியில் கோயில் கொண்டுள்ள பேரருளாளன் விஷயமாக அருளிச் செய்துள்ள **அடைக்கலப்பத்தையும்** அனுஸந்திப்பதால் ஏற்படக்கூடிய நன்மைகள் சொல்லில் அடங்கா. சிக்கலான ப்ரச்னைக்குத் தீர்வு காணவும், வழக்குகளில் வெற்றி பெறவும், பணக்கஷ்டமும் மனக்கஷ்டமும் நீங்கவும் நம் பெரியோர்கள் இவ்விரண்டையும் அனுஸந்தித்துப் பலன் கண்டது அனுபவம் கூறும் உண்மை.

எனவே ஆஸ்திகர்கள் தினந்தோறும் எழுந்து நீராட்டம் செய்து திருமண்காப்பு அணிந்து ஏனைய நித்ய கர்ம அனுஷ்டானங்களையும் முடித்துக்கொண்டு குடும்பத்தில் உள்ள யாவரும் சேர்ந்து கோஷ்டியாக அனுஷ்டித்தல் நலம். இப்படிச் செய்வது ஸாத்யம் இல்லாவிட்டால், குடும்பத்தில் யாரேனும் ஒருவர் மட்டும் அனுஸந்தித்தாலும் போதும். அதுவும் ஸாத்யம் இல்லாத பக்ஷத்தில் அவச்யம் நேரும் போது உருக்கமாக அனுஸந்தித்தால் நிச்சயமாகப் பலன் கிடைக்கும். இதற்குச் சில நிமிடங்களே போதும்.


*வித்தகன் வேதியன் வேதாந்த தேசிகன் எங்கள் தூப்புல்*
*மெய்த்தவன் உத்தமன் வேங்கடநாதன் வியன்கலைகள்*
*மொய்த்திடு நாவின் முழக்கொடு வாதியர் மூலமறக்*
*கைத்தவன் என்று உரைத்தேன் கண்டிலேன் என் கடுவினையே.* **(பிள்ளையந்தாதி - 6)**

ஸ்ரீ:

கண்ணுக்கினியன







ஆண்டாள் நீராட்ட உத்ஸவம்



'கூடாரை வெல்லும் சீர்' தடா உத்ஸவம்



திருப்பாவை உபந்யாஸ பூர்த்தி

ஸ்ரீ:



## வைகுண்ட ஏகாதசி














வைகுண்ட ஏகாதசி





போகி உத்ஸவம்









போகி உத்ஸவம் - ஆண்டாள் திருக்கல்யாணம்









ஸங்க்ராந்தி உத்ஸவம் புறப்பாடு



இராப்பத்து உத்ஸவம்



ஸ்ரீ:



திருமழிசை ஆழ்வார் திருநக்ஷத்ரம்






அத்யயன உத்ஸவ பூர்த்தி புறப்பாடு

ஸ்ரீ:

கண்ணுக்கினியன









அத்யயன உத்ஸவ சாற்றுமுறை - ஆழ்வார் திருவடி தொழல்









ஸ்ரீ:





இயற்பா சாற்றுமுறை





பல்லாண்டு தொடக்கம் – பெரியாழ்வார் ஆஸ்தானம்



பாரிவேட்டை உத்ஸவம்















ரத ஸப்தமி புறப்பாடு







ஸ்ரீ:

கண்ணுக்கினியன





ரத ஸப்தமி புறப்பாடு



சதயம் - பேயாழ்வார் மாஸ உத்ஸவம்

ஸ்ரீ:



கோதா கோஷ்டியினர் திருவிளக்குகள் உபயம்







ஸ்ரீ:

# எம்பெருமான் பொன் மலை மேல் ஏதேனும் ஆவேனே!

ஸ்ரீ உ.வே. திருவயிந்தை திருவாழி க்ருஷ்ணதேசிகாசார்யர் ஸ்வாமி, மயிலாப்பூர்

மாசி-புனர்வஸுவில் அவதரித்த ஆழ்வார் ஸ்ரீ குலசேகரப் பெருமாள். இவர் தன்னுடைய நன் பொருள் சேர் ''பெருமாள் திருமொழி'' முதல் பதிகத்தில் திருவரங்கனை அனுபவித்து, இரண்டாம் பதிகத்தில் ''வன்பொன்னிப் பேராறு போல்வரும் கண்ண நீர் கொண்டு அரங்கன்கோயில் திருமுற்றம் சேறு செய் தொண்டர் சேவடி **செழும் சேறு என் சென்னிக்கணிவனே** என்று தனது பாகவத காஷ்டையை நிரூபித்தார். **''மெய்யில் வாழ்க்கை''** பதிகத்தில் அரங்கன் அடியிணையில் தான் தனிப்பெரும் பித்தன் என்று கூறினார்.

*எம் பரத்தர் அல்லாரொடும் கூடலன்;*
*உம்பர் வாழ்வை ஒன்றாகக் கருதிலன்*
*தம்பிரான் அமரர்க்கு அரங்க நகர் எம்பிரானுக்கு*
*எழுமையும் பித்தனே*

நான்காம் பதிகமான **''ஊனேறு செல்வத்தில்''** ஆழ்வாரின் திருவுள்ளம் திருமலையப்பன் பக்கம் திரும்புகிறது. திருவேங்கடத்தில் கோனேரிவாழும் ஒரு **குருகாய்** (சேதன வஸ்துவாய்) தான் பிறக்கவேண்டும் என்று திருவுள்ளம் கொள்கிறார் ஆழ்வார்.

இரண்டாம் பாசுரத்தில் வானுலகையும் இந்த மண்ணுலகை ஆள்கின்ற செல்வமும், தனக்கு கிடைத்தாலும் வேண்டாம், திருவேங்கடத்தில் தேன் உள்ள பூஞ்சோலையில் பாய்கின்ற நன்னீர்ச் சுனையில் **ஒரு மீனாய்** (சேதன வஸ்துவாய்) தான் பிறக்கவேண்டும் என்று விரும்புகிறார் ஆழ்வார். மீனாய் பிறந்தால் எப்படி பெருமாள் சேவை கிடைக்கும் என்று நாம் நினைக்கின்றோம். ஆனால், இந்த வரிகளுக்கு, ஸ்ரீமத் திருக்குடந்தை ஆண்டவன் ஸ்வாமி அனுக்ரஹித்த அத்புத வ்யாக்யானம் இதோ.

ஆழ்வார் தான் **''தேட்டரும் திறல்''** பதிகத்தில் காட்டிய பாகவத காஷ்டையிலிருந்து விலகாததால், **''ஆனாத செல்வத்து அரம்பையர்கள் தற்சூழ''** என்ற பாசுரத்திலும் அதையே நாடுகிறார். தான் பூஞ்சோலையில் பாய்கின்ற நன்னீர்ச் சுனையில் ஒரு மீனாய் பிறந்தால், அந்தச் சுனையில்வந்து அனுஷ்டானம் செய்யும் அனேக



பரம பாகவதோத்தமர்களின் **திருவடி ப்ரசாதம்** அந்த நன்னீரில் இருக்கும், அந்த திருவடித்துகள்களையே தான் உண்டு உஜ்ஜீவிப்பேன் என்கிறார் ஆழ்வார். அதனாலேயே ஆழ்வார் தான் **மீனாய் பிறக்க வேண்டும்** என்று ப்ரார்த்திக்கிறார் என்று ஸ்ரீமத் ஆண்டவன் திருவுள்ளம்.

மூன்றாம் பாசுரத்தில், ப்ரம்மனும், தலையில் சடை தரித்தவரும், வாசலில் நின்று தொழும் பாக்யம் பெற்றவர்களும், அவர்களுக்கு அனுக்ரஹம் செய்யும் திருவேங்கடகத்தான் உமிழும் திருஅதர (வாய்) நீரைப் **பொன் வட்டிலில் பிடித்து** ஏந்தும் பாக்யம் தான் பெற வேண்டும் என்று தன் ஏக்கத்தை ஆழ்வார் திருவுள்ளத்திலிருந்து வெளிப்படுத்துகிறார்.

பின்பு, பாற்கடலிலே பள்ளி கொண்டு கண் வளர்கின்ற மாயனின் திருவடிகளைக் காண்பதற்கு, ரீங்காரம் இட்டுத் திரியும் வண்டுகள் நிறைந்த திருவேங்கடகத்தில் **செண்பகமாய் (அசேதனமாய்)** தான் நிற்கும் அனுக்ரஹம் பெறமாட்டேனா என்று புலப்புகிறார் ஆழ்வார்.

பட்டத்து யானையின் மேல் உலா வரும் ஒரு மன்னனாகிய ஸ்தானமும், நாடு, நகரம் என்ற செல்வமும் தனக்கு வேண்டாம் என்றும் ஈசனாகிய திருவேங்கடத்தானுடைய எழில் மலை மேல் ஓர் **ஸ்தம்பம் (தூண்)** (அசேதனமாய்) நிற்கும் ப்ராப்தம் (தபஸ்) பெற வேண்டும் என்று ப்ரார்த்திக்கின்றார் ஆழ்வார்.

மெல்லிய திருமேனியும், சிறுத்த ஒக்கலையையும் (இடுப்பு) உடைய மேனகை, ஊர்வசி போன்றார்களின் ஆடல் பாடல்களைத் தான் விரும்பாமல் இருப்பேன் என்றும், வண்டுகள் எப்பொழுதும் ரீங்காரம் இட்டுத் திரியும் குளிர்ந்த திருவேங்கடத்தில் **''அன்னனைய பொற்குவடு''** ஆகும் படியான தவத்தை (பாக்யத்தை) தான் பெற்று இருக்க வேண்டும் என்று ஆழ்வார் திருவுள்ளப்படுகிறார்.

வெண் கொற்றக்குடையின் கீழே வானாள்கின்ற பாக்யமும் மன்னவர்களுக்கெல்லாம் தலைவனாக, பேரரசனாகும் ஆசையும் தனக்கு இல்லை என்றும், எப்போதும் தேன் சொறிகின்ற பூஞ்சோலை உடைய திருவேங்கடத்தில் ஒரு **காட்டாறு போல்** தான் பாய்கின்ற பாக்யம் பெற வேண்டும் என்று ஆழ்வார் ஆசைப்படுகிறார்.

பாதி சந்த்ரனைத் தலையில் உடைய சிவனும், ப்ரம்மனும், இந்த்ராதி தேவர்களும் முறையாக வேள்வி செய்யும் போது அவர்களிடம் உள்ள குறைகளைக் களையும் திருவேங்கடவன், அவன் வாழும் குளிர்ந்த திருவேங்கடமலை மேல் **நெறியாய்க் கிடக்கும் ஒரு நிலையைத்** தான் அடைய வேண்டும் என்பது தான் ஆழ்வாரின் திருவுள்ளமாக இருந்தது.

மாறி மாறி பல பிறவிகளில் நாம் சேர்த்துக் கொண்ட பல வல்வினைகளை **''கடுவினையர் இருவினையும் கடியும் வெற்பு''** என்றபடி, அடியோடு தீர்த்து வைக்கும் திருமாலாகவும், நெடுநாளாக (புருஷ: புராணனாக) இருப்பவரும், பெரியவரும் திருவேங்கடமலை மேல் வாஸம் செய்பவருமான உன்னை, பக்தர்களும், வானவர்களும் வந்து ஸேவிக்கும் போது, உன் கோயிலின் வாசலில், **படியாய்க் கிடந்து (குலசேகரப்படி)** இருந்து கொண்டு, உன்தன் பவளவாயை ஆழ்வாராகிய அடியேன் காண்பேன் என்கிறார். இங்கும் ஆழ்வார் தன்னுடைய பாகவத பக்தியை வெளிப்படுத்துகிறார். தான் படியாய்க் கிடக்கும் போது பரம பாகவர்களின் திருவடிகள் ஆழ்வாரின் திருமேனியில் படும், அதுவே ஆழ்வாருக்கு பரம போக்யமாக இருக்கும் என்கிறார். ஒரு நாள் இல்லை, இரு நாள் இல்லை, எத்துனை காலம் திருவேங்கடத்தான் திருமலையில் அர்ச்சாவதாரத்தில் ஸேவை சாதிக்கின்றானோ அவ்வளவு காலமுமே. பக்தர்கள் அவரது திருமேனி மிதித்து வேங்கடவனைக் காண்பர். அதுவே ஆழ்வார் உகந்தது. அந்த பாகவத ஸம்ஸர்கத்தாலே அவர் வேங்கடவனின் திருப் **பவளவாய் காண்பேன்** என்கிறார்.

*''செடியாய வல்வினைகள் தீர்க்கும் திருமாலே*
*நெடியானே வேங்கடவா நின் கோயிலின் வாசல்*
*அடியாரும் வானவரும் அரம்பையரும் கிடந்து இயங்கும்*
*படியாய்க் கிடந்து உன் பவளவாய் காண்பேனே.''*

இப்படியாக, ஆழ்வார் திருவேங்கடத்தில் ஒரு ஸம்பந்தம் வேண்டி, குருகாய், மீனாய், பொன் வட்டிலாய், கம்பமாய், பொன் குவளையாய், படியாய் தான் இருக்க வேண்டும் என்று ப்ரார்த்தித்து அவை கிடைக்காவிடில் இறுதியில் குளிர்ந்த திருவேங்கடப் பொன் மலை மேல் நின்று அருள் பாலிக்கும் கண் ணணின் திருவடிவாரத்தில் **ஏதேனும் ஒரு வஸ்துவாக (சேதன (அ) அசேதன வஸ்துவாக)** தான் ஆக வேண்டும் என்று நெஞ்சுருக ப்ரார்த்திக்கிறார் குலசேகர ஆழ்வார்.

*''உம்பர் உலகு ஆண்டு ஒருகுடைக்கீழ் உருப்பசிதன்*
*அம்பொற் கலை அல்குல் பெற்றாலும் ஆதரியேன்*
*செம் பவள வாயான் திருவேங்கடம் என்னும்*
*எம்பெருமான் பொன்மலைமேல்ஏதேனும் ஆவேனே.''*

சரணாகத வத்ஸலனாய் ஸ்ரீராம-க்ருஷ்ணனாய் அவதரித்த பெருமாளை, என்றும் விடாமல் ஸ்ரீ குலசேகராழ்வாரைப் போல் நாமும் சரணடை வோம். ஏனெனில் அவன் பாத நிழலே நமக்கு சரண் அளிக்கும். வேறு உயிர்ப்பிடம் நாம் எங்கும் காணகிலோம்.

ஆசார்ய வள்ளல் ஸ்வாமி தேசிகன் கீழ்கண்டவாறு இவ்வாழ்வார் பற்றி அருளிச்செய்து கொண்டாடுகிறார்.

*பொன்புரையும் வேல் குலசேகரனே மாசிப்*
*புனர்பூசத்து எழில்வஞ்சிக் களத்தில் தோன்றி*
*அன்புடனே நம்பெருமாள் செம்பொற் கோயில்*
*அனைத்து உலகின் பெரு வாழ்வும் அடியார் தங்கள்*
*இன்பமிகு பெரும் குழுவும் காண மண்மேல்*
*இருளிரிய வென்றெடுத்த இசையில் சொன்ன*
*நன்பொருள்சேர் திருமொழி நூற்றைந்து பாட்டும்*
*நன்றாக எனக்கருள் செய் நல்கி நீயே.*

*[ப்ரபந்த சாரம் –8]*

ஸ்ரீ:

# அருளிச்செயல்கள் காட்டும் ஆகிஞ்சன்யம்

ஸ்ரீமதி பழவேரி ரமா ராகவஸிம்ஹன்

ஸம்ஸார ஸாகரத்தில் ஜன்ம ம்ருத்யு ஜரா வ்யாதி என்ற சுழற்சியில் சிக்கித் தவிக்கும் சேதன வர்கங்களைக் கரை சேர்க்க ஆழ்வார்கள் மேற்கொள்ளும் ப்ரயத்னங்கள் சொல்லிலடங்கா. மாயையானது தம் கண்களை மறைக்க, கர்மபத்தர்களான ஆச்ரிதர்கள் ஸம்ஸார ஸாகரத்தில் உழன்று கொண்டே இருப்பதைக் கண்டு ஹ்ருதயம் நோவு கொண்ட ஆழ்வார்கள், அவர்களை இந்த சாபக்கேட்டிலிருந்து மீட்பதற்கென ஸேவித்தவையே நாலாயிரம் பாசுரங்கள்.

எம்பெருமான் ஒருவனே கர்மபத்தர்கள் அடையத் தக்க உபேயம் என்று பூர்வாசார்யர்கள் பற்பல ஸ்ரீஸூக்திகள் ஸாதித்த போதும், அகக்கண்களுடன் புறக்கண்களையும் மறைக்கும் மாயையானது இதனை ஹ்ருதயத்திற்கு உணர்த்தாது தடுக்கும். சேதனர்களின் ஆகிஞ்சன்யத்தை அவர்தமக்கு புரியும் வண்ணம் ஆழ்வார்கள் ஸேவித்த பாசுரங்கள் சிலவற்றில் அந்வயித்து, ஸர்வாந்தராத்மனின் ஸர்வ சக்தித்வம் மற்றும் நமது ஆகிஞ்சன்யம் இவற்றை உணர்வோம்.

**ஜன்மமே வ்யர்த்தம் என்ற தொண்டர் அடிப்பொடி**

**''போதெல்லாம் போது கொண்டுன் பொன்னடி புனையமாட்டேன்'** என்று தொடங்கும் பாசுரத்தில், **'போது'** என்பது ஒரு பொழுதும் என்றும் நல் வாசமுள்ள புஷ்பம் என்றும் இரு பொருள் கொள்கிறது. **''போதெல்லாம் போது கொண்டு''** — மானஸீகமாக உன்னடி தொழும் திறனற்றவன் என்பதனால் ஒன்றுமே தெரியாது என்ற போதிலும், வாசமிகு புஷ்பங்களைக் கொண்டு கர்மபத்தனான அடியேன் உனக்கு அர்ச்சனையாவது செய்தேனா என்றால் இல்லை. இப்படி அநித்யமான தேஹத்தினைக் கொண்டு பண்ணக் கூடிய சின்னஞ்சிறு விஷயத்தையும் கூட பண்ணாத அடியேனது இந்த ஜென்மமே வ்யர்த்தமானது என்று ஸாதிக்கிறார் ஆழ்வார் - **''ஏதிலேன் என்செய்வான் தோன்றினேனே''.**

**'மெய்யெலாம் போக விட்டு'** எனத் தொடங்கும் மற்றுமொரு பாசுரத்திலோ **'பொய்யனேன் வந்து நின்றேன் பொய்யனேன் பொய்யனேனே'** என்று தன்னைத் தாழ்த்திக் கொள்கிறார். சேதனர்களாம் நாம் கொள்ளும் பக்தி எவ்வளவு கபடம் நிறைந்தது என்பதைத் தனது நிலையாகக் கூறி நமது ஆகிஞ்சன்யத்தை நமக்கு உணர்த்துகிறார்.

**''எனக்கினி கதியென் சொல்லாய்''** என்ற பதங்கள் தனக்கு சரணாகதி அனுக்ரஹம் பண்ணுமாறு நிரவதிகமான மாஹாத்ம்யம் நிறைந்தவனிடம் ஆழ்வார் கேட்பதாக அமைவதோடு, ஆச்ரிதர்களாம் நமக்கு அவனையல்லால் வேறொரு கதி இல்லை என்பதை நிஷ்கர்ஷம் பண்ணி நமது ஆகிஞ்சன்யத்தினை உணர்த்தும்.

**''பாரில்நின் பாத மூலம் பற்றிலேன் பரம மூர்த்தி''** -- அந்த பரமமூர்த்தி ஒருவனே மோக்ஷம் அனுகிரஹிக்க வல்லவன் என்று தனது அநந்யகதித்வத்தை விளக்குகிறார் **'தொண்டர் அடிப்பொடி'** ஆழ்வார்.

நாயினேன் என்றுரைத்த திருமழிசைப்பிரான்

திருமழிசைப்பிரானோ, **'காரொடொத்த மேனிநங்கள் கண்ணவிண்ணின் நாதனே'**, **'பின்பிறக்க வைத்தனன் கொலன்றி'**, **''மறம்துறந்து வஞ்சமாற்றி ஐம்புலன்களாசையும் துறந்து'**, **'தூயனாயுமன்றியும் சுரும்புலாவு தண்டுழாய்'**, **'வைதுநின்னை வல்லவா பழித்தவர்க்கும் மாறில்போர் செய்து'**, **'தோடுபெற்ற தண்டுழாயலங்கலாடு சென்னியாய்'** என்று தொடங்கும் பல திருச்சந்தவிருத்த பாசுரங்களில் 'நாயினேன்' என்றுரைக்கிறார். **'நாயினேன்'** என்று தனது ஆகிஞ்சன்யத்தினை உணரவும் ப்ரகடனப்படுத்தவும் கூட அந்த கருணாஸாகரனின் நிர்ஹேதுக கடாக்ஷம் அவச்யமாகிறது.

பக்திஸாரரின் மற்றொரு ப்ரபந்தமான நான்முகன் திருவந்தாதியில் ஸ்ரீமந் நாராயணனைத் தான்



அனுபவித்து **'அனுபவிக்கத் தக்கவன் அவன் ஒருவனே'** என்று நமக்கு உரைத்தார். விஷ்ணுவே பரதத்வம் என்ற ஞானம் அற்றோர் வைஷ்ணவத்வம் இல்லாதவர் என்பதினால் பகவதனுபவத்திற்கு யோக்யதை அற்றவர் என்று ஸாதித்து அவன் திருவடியின் ஏற்றத்தினை உரைக்கிறது நான்முகன் திருவந்தாதி.

**'அருள் முடிவதாழியான்பால்', 'அருபொருளை யானறிந்தவாறு', 'மாதவனை ஏத்தார் ஈனவரே', 'நாரணனே நீயென்னையன்றியிலை', 'ஆல்மேல் வளர்ந்தானைத் தான் வணங்குமாறு'** என்று பற்பல பதங்களின் மூலம் நாராயணின் ஏற்றம் கூறி தனது ஆகிஞ்சன்யத்தை உணர்த்துகிறார் ஆழ்வார். இதன் மூலமாக இங்கு தனது ஆகிஞ்சன்யமாக ஆழ்வார் உணர்த்துவது கர்மபத்தர்களாம் நமது ஆகிஞ்சன்யத்தினையே.

**அடியேன் சிறிய ஞானத்தன் என்ற நம்மாழ்வார்**

'நம் ஆழ்வார்' என்று ஸ்ரீவைஷ்ணவர்கள் சொந்தம் கொண்டாடும் மாறன் சடகோபன் **'அடியேன் சிறிய ஞானத்தன் – செடியார் ஆக்கையடியாரைச் சேர்தல் தீர்க்கும் திருமாலை அடியேன் காண்பான் அலற்றுவன், இதனில் மிக்கோர் அயர்வுண்டே?'** என்று ஸாதிக்கிறார். ஸர்வஜ்ஞர்களாகும் உயர்ந்த ஜ்ஞானஸ்தர்களே எம்பெருமானைப் பரிபூர்ணமாக அறியவொண்ணாது கலங்கி நிற்க, அற்ப ஜ்ஞானத்தினை உடையவனான அடியேன் அந்த விலக்ஷணனின் ஸேவை வேண்டி நிற்பது மூடத்தனத்தின் உச்சம் என்கிறார்.

**'அடியேன்'** என்று உரைத்து தனது ஆகிஞ்சன்யத்தைக் உணர்த்தும் ஆழ்வார், எம்பெருமானின் ஸேவை வேண்டுமென்று தான் ஸேவிக்கும் இத்தகைய மொழிகளை **அரற்றுதல்** என்கிறார். ஜ்ஞானத்தின் சிகரமாகும் நம்மாழ்வார் காட்டும் இத்தகைய ஆகிஞ்சன்யமானது ஆச்ரிதர்களாம் நமக்கு அவர் அளிக்கும் ஈடுயிணையில்லாத உபதேஸம்.

திருவாய்மொழி எட்டாம் பத்துப் பாசுரங்கள் ஒவ்வொன்றிலும் எம்பெருமானின் ஏற்றத்தினைக் கூறி அதன் மூலம் சேதன வர்க்கங்களின் ஆகிஞ்சன்யத்தை விளக்குகிறார் நம்மாழ்வார்.

**'அங்குமிங்கும் வானவர் தானவர் யாவரும் – எங்கும் இனையையென்றுன்னை அறியகிலாதலற்றி – அங்கம் சேரும் பூமகள் மண்மகள் ஆய்மகள் – சங்கு சக்கரக் கையவனென்பர் சரணமே'** எனும் இந்தப் பாசுரத்தின் மூலம் வானவர் தானவர் மற்றுமுள்ளோர் அனைவரும் கண்ணனையே சரண் புகுவர் என்று கூறி அனைவரின் ஆகிஞ்சன்யத்தினையும் உணர்த்துகிறார்.

**'கொடியார் மாடக் கோளூரகத்தும் புளிங்குடியும் – மடியாதின்னே நீதுயில் மேவி மகிழ்ந்ததுதான் – அடியார் அல்லல் தவிர்த்த அசைவோ? அன்றேல் – இப்படிதான் நீண்டு தாவிய அசைவோ? பணியாயே'** என்று வரும் மற்றொரு பாசுரத்தில் அடியார்களின் அல்லல் தீர்த்ததனாலா மூன்றடி எடுத்து வைத்ததனாலா? எதனால் இவ்வளவு ஆயாஸம் கொண்டுள்ளாய் என்று த்ரிவிக்ரமனாக அவதரித்தவனிடம் வினவுகிறார் மாறன் சடகோபன். இப்படி மூன்றடி அளந்தானிடம் வினவுவதன் மூலம் ஸதா ஸர்வகாலமும் அடியார்களின் கொடுந்துயர் தீர்ப்பவன் அவன் என்று கூறி, நமது ஆகிஞ்சன்யத்தை உணர்த்துகிறார்.



நம்மாழ்வார்

**'திருமால் நான்முகன் செஞ்சடையானென்றிவர்கள் – எம்பெருமான் தன்மையை யாரறிகிற்பார் பேசியென் – ஒருமா முதல்வா! ஊழிப் பிரானென்னையாளுடை – கருமா மேனியன் என்பனென் காதல் கலக்கவே'** எனும் அருளிச் செயலில் **'ஊழிப் பிரான்'** என்று ஸாதித்து, ஊழிக் காலத்தே அண்ட சராசரங்களையும் தன்னுள் அடக்குபவனின் கீர்த்திமை பாடியதோடு, **'என்னையாளுடை கருமா மேனியன்'** என்று கூறி, தான் எவரது அடிமை என்பதை நிஷ்கர்ஷம் பண்ணுகிறார்.

**அல்லல் படாவண்ணம் காக்க வேண்டும் என்ற பெரியாழ்வார்**

**'சாமிடத்து என்னைக் குறிக்கொள் கண்டாய் சங்கொடு சக்கர மேந்தினானே – நாமடித்து என்னை அனேக தண்டம் செய்வதா நிற்பர் நமன்தமர்கள் – போமிடத்து உன்திறத்து எத்தனையும் புகாவண்ணம் நிற்பதோர் மாயை வல்லை – ஆமிடத்தே உன்னைச் சொல்லி வைத்தேன்'** எனும் பாசுரத்தில், உயர்வற உயர்நலம் உடையவன் பரவாசுதேவன் என்பதைப் பறைசாற்றுகிறார். எனது இந்த தேகத்தினை விட்டு ப்ராணன் நீங்கும் போது, எமபடர்களானவர் அடியேனது துஷ்கர்மாக்களுக்குத் தண்டனை அளிக்கும் வகையில் தங்களது நாக்கினை மடித்துக் கொண்டு, கண்களை அகல விழித்து

உறுத்துப் பார்த்து, மிகுந்த சீற்றத்துடன் என்னை இழுத்துக் கொண்டு செல்வர். நீயோ பெரும் மாயாவி. அடியேனது அந்திம காலத்தே எனது ஹ்ருதயத்தினுள் உன்னைப் பற்றின சிந்தனைகள் வாராமல் செய்யவல்லவன். உன்னை மறைத்துக் கொண்டு மாயச்செயல்களில் ஈடுபட வல்லவனான உன்னை அடியேனது அந்திம காலத்தே நினைப்பதென்பது அரிது (**''ஒன்றும் மாயம் செய்யேல் என்னையே''**) என்பதனால், இந்த்ரியங்கள் ஸ்வாதீனத்துடன் இருக்கும் போதே அபயப்ரதானம் பண்ண வேணுமாய் ப்ரார்த்திக்கிறேன் என்கிறார்.

அரங்கத்தரவணையான் திருவடிகளில் ஆழ்வார் இப்படி விஜ்ஞாபிப்பது, அடையப்படவேண்டிய உபேயம் அவனே என்பதைக் காட்டுவதோடு, உபேயமாகும் அவனையடைய உபாயமும் அவனே என்றும் ஸாதிக்கிறது. அடையப்பட வேண்டியவனான ஆராவமுதனை அடைவதற்கும் அவனது ஸங்கல்பம் அவச்யமாகிறது என்பதோடு, இந்திரியங்களுக்குக் கட்டுப்பட்ட சேதனர்களின் ஆகிஞ்சன்யத்திற்கும் இந்தப் பாசுரம் கட்டியம் கூறும்.

**'எல்லையில் வாசல் குறுகச் சென்றால் எற்றி நமன்தமர் பற்றும் போது — நில்லுமி னென்னும் உபாய மில்லை நேமியும் சங்கமும் ஏந்தினானே —சொல்லலாம் போதே உன் நாமமெல்லாம் சொல்லினேன் என்னைக் குறிக்கொண்டு என்றும் — அல்லல் படாவண்ணம் காக்க வேண்டும்...'**

இந்த அருளிச்செயலில், **'நமன்தமர் பற்றும் போது நில்லுமினென்னும் உபாயமில்லை'** எனும் பதங்கள் (கர்மாக்களினால் ஜன்மங்கள் கொள்ளும் சேதனர்களின் அந்திம காலத்தில்) **'என்னை நெருங்காது தள்ளி நில்லுங்கள்'** என்று எமபடர்களைத் தடுத்து நிறுத்தும்படியான உபாயம் ஏதும் எம்மிடத்தில் இல்லை என்று தனது (நமது) ஆகிஞ்சன்யத்தை வெளிப்படுத்துகிறார். 'உபாயமில்லை' என்ற பதமானது உபாயமாக எக்காலத்திலும் இருப்பது அந்த அரங்கத்தணையானின் திருவடிகள் மட்டுமே என்பதை அழுந்தக் கூறும்.

**'சொல்லலாம் போதே உன் நாமமெல்லாம் சொல்லினேன்'** — எனது இந்த தேகத்தில் சக்தி இருக்கும் போதே உனது ஈடுயிணையில்லாத திருநாமங்களை சொல்லி வைத்தேன். இதனை நீ திருவுள்ளத்தே கொண்டு அடியேனது அந்திம காலத்தில் எனக்கு அநர்த்தம் நேராதபடி ரக்ஷிக்க வேண்டும் பிரானே. அடியேனது சரம தசையிலும் கூட என்னைக் காத்தருள்வாய் நம்பி என்று ப்ரார்த்திக்கிறார் ஆழ்வார் பிரான்.

ப்ரதியுபகாரம் எதிர்பார்த்து எம்பெருமானின் மீது கொள்ளும் பக்தியானது கபடதாரியான அடியோங்களது உண்மையான ஸ்வரூபம் என்பதை கோதை நாச்சியார் **'அறியாத பிள்ளைகளோம் அன்பினால் உன்தன்னை சிறுபேரழைத்தனவும் சீறி அருளாதே'** என்று ஸாதிக்கிறாள். இங்கு **'அறியாத பிள்ளைகளோம்'** என்பது கர்ம, பக்தி, ஞான யோகம் என்று ஒன்றையும் செய்யும் திறனற்ற ஆச்ரிதர்கள் ஆகிஞ்சனர்கள். **'மா சுச:'** (கவலைப்படாதே) என்று ஸாதித்து நம்மைக் கரை சேர்க்கும் எம்பெருமானின் சீற்றமும் கூட சேதனர்களாம் நமக்கு அனுக்ரஹமாகிறது என்கிறாள் பெரியாழ்வார் புத்ரி.

அநந்யகதித்வம், ஆகிஞ்சன்யம் இரண்டும் ஸ்ரீவைஷ்ணவத்தின் அஸ்திவாரமாகின்றன. உன்னையல்லால் வேறு கதி ஏதும் எனக்கு இல்லை என்பது அநந்யகதித்வம். வேறு கதியேதும் அற்ற அசக்திமானான அடியேனுக்கு மோக்ஷம் ப்ராப்தமாக நின்னையல்லால் வேறொரு உபாயம் அறியேன் என்று தனது ஆகிஞ்சன்யம் உணர்ந்து அவனடி பற்றுவது சரணாகதி.

பரிபூர்ண சரணாகதியின் ப்ரதான அங்கங்களாகும் அநந்யகதித்வமும் ஆகிஞ்சன்யமும் சேதனர்களால் உணரப்பட வேண்டிய அதிமுக்கியமான விஷயங்கள். இவற்றை ஆச்ரிதர்களான அனைவரும் அறிந்து உய்ய வேண்டுமென்ற பேராவலில் எல்லையில்லா காருண்யத்துடன் ஆழ்வார்கள் அருளிச் செய்த நாலாயிரம் பாசுரங்களும் ஈடுஇணையில்லாத பொக்கிஷங்கள். எம்பெருமானின் திருவுள்ளத்திற்கு உகப்பாகும் அருளிச் செயல்களை அனுதினமும் அநுஸந்தித்து அல்லிமாமலர் மங்கை மணாளனின் திருவடி பணிவோம்.

| மாசியில் முக்கிய உத்ஸவங்கள் |
|---|
| **தவனோத்ஸவம் (3 நாட்கள்)**<br>பிப்ரவரி 14 (திங்கள்) முதல் 16 (புதன்) வரை |
| **மாசி பௌர்ணமி**<br>பெருமாள் ஸமுத்ர ஸ்நான புறப்பாடு<br>பிப்ரவரி 16 (புதன்) |
| **அன்னகூட உத்ஸவம்**<br>பிப்ரவரி 20 (ஞாயிறு) |
| **ச்ரவணம்**<br>பிப்ரவரி 28 (திங்கள்) |
| **ஸ்ரீ லக்ஷ்மி ஹயக்ரீவர் லக்ஷார்ச்சனை**<br>மார்ச் 6 (ஞாயிறு) |
| **ஸ்ரீ திருக்கச்சி நம்பிகள் திருநக்ஷத்ரம்**<br>மார்ச் 11 (வெள்ளி) |
| **குலசேகர ஆழ்வார் திருநக்ஷத்ரம்**<br>மார்ச் 13 (ஞாயிறு) |

ஸ்ரீ:

# பச்சையிட்டுத் திருத்திப் பணிகொண்ட மணக்கால் நம்பி

ஸ்ரீ சோகத்தூர் ஸ்ரீவத்ஸன், நங்கநல்லூர்

ஸ்வாமி தேசிகன் அருளிய அதிகாரஸங்க்ரஹம் என்னும் ப்ரபந்தத்தில் இடம்பெறும் கீழ்க்கண்ட ஆசார்ய பரம்பரை பாசுரத்தை அநுஸந்திக்காமல் நம் ஆசார்ய வந்தனம் பூர்த்தியாகாது.

*என் உயிர் தந்தளித்தவரைச் சரணம் புக்கு*
*யான் அடைவே அவர் குருக்கள் நிரை வணங்கி*
*பின் அருளால் பெரும்பூதூர் வந்த வள்ளல்*
*பெரியநம்பி ஆளவந்தார் மணக்கால் நம்பி*
*நன்னெறியை அவர்க்குரைத்த உய்யக்கொண்டார்*
*நாதமுனி சடகோபன் சேனை நாதன்*
*இன் அமுதத் திருமகள் என்றிவரை முன்னிட்டு*
*எம்பெருமான் திருவடிகள் அடைகின்றேனே.*

(அதிகார ஸங்க்ரஹம் - 3)

நமக்கு நல்லுபதேசங்களைச் செய்து ஜீவன்கள் அனைவரும் பரமபுருஷனான ஸ்ரீமந் நாராயணன் ஒருவனுக்கே அடிமை என்று காட்டிக்கொடுத்த நம் ஆசார்யன், அவருடைய ஆசார்யன், அவருடைய ஆசார்யன் ஆகிய இவர்களை முன்னிட்டுக்கொண்டு எம்பெருமான் திருவடிகளைச் சரணடைவோமாக என்று தலைக்கட்டுகிறார் நம் கவிஸிம்ஹம். இப்பேர்ப்பட்ட பேருபகாரத்தை நமக்கருளிய நம் ஆசார்ய கோஷ்டியில் ஸ்வாமி நம்மாழ்வாருக்கு அடுத்ததாக இருப்பவர் ஸ்ரீமந் நாதமுனிகள். அவருடைய சிஷ்யர் ஸ்ரீ உய்யக்கொண்டார். உய்யக்கொண்டாரின் ஸ்ரீபாதத்தை ஆச்ரயித்தவர்களுள் ப்ரதானமானவர் ஸ்வாமி மணக்கால்நம்பி.

மாசி-மகத்தில் திருவவதரித்த மணக்கால் நம்பியின் இயற்பெயர் ஸ்ரீராமமிச்ரர். இவர் பன்னிரண்டு வருடங்கள் உய்யக்கொண்டார் திருவடிகளில் ஸர்வவித கைங்கர்யங்களையும் செய்து கொண்டு வந்தார். உய்யக்கொண்டார் தேவிகள் பரமபதிக்க, அவருடைய திருமாளிகைக் கைங்கர்யங்கள் அனைத்தையும் தாமே செய்து வந்து அவரின் அத்யந்த சிஷ்யராய் எழுந்தருளியிருந்தார் ஸ்ரீராமமிச்ரர்.

ஒருநாள் உய்யக்கொண்டாருடைய பெண்பிள்ளைகள் இருவரையும் நீராட்டி அழைத்து வருகையில் வழியில் வாய்க்காலில் சேறாயிருப்பது கண்டு அதைத் தாண்ட முடியாமல் சிறுமிகள் வருந்தி நிற்க, ஸ்ரீராமமிச்ரர் அப்பிள்ளைகள் தன் முதுகின் மேல் அடியிட்டு எழுந்தருளும்படி அச்சேற்றின் மேல் படியாய்க் கிடந்து அழைத்துக் கொண்டு போனார். ஆசார்யனின் புத்ரிகளின் மணற்கால் பொலிய நின்ற திருமேனியை உடையவராயிருந்தமையால் அன்று முதல் இவர்க்கு ''மணற்கால் நம்பி'' என்ற திருநாமம் ஏற்பட்டது.

உய்யக்கொண்டார் திருநாட்டுக்கு எழுந்தருளுகையில் மணக்கால் நம்பியிடம் ''சொட்டைக் குலத்தினரான ஈஸ்வரமுனிகள் திருவயிற்றிலே ஸ்ரீமந் நாதமுனிகளுக்கு ஒரு திருப்பேரனார் அவதரிப்பார்; அவருக்கு யமுனைத்துறைவர் என்று திருநாமஞ் சாற்றி நம் தர்சன ப்ரவர்த்தகராம்படி ரஹஸ்யார்த்த விசேஷங்களையும் இன்னும் பிற விசேஷ அர்த்தங்களையும் உபதேசியும். இந்தக் கைங்கர்யத்தை ஸ்ரீமந் நாதமுனிகள் தம் அந்திம தசையிலே அடியேனுக்கு நியமித்தருளினார்; நான் செய்யப்பெற்றிலேன். நீர் அவரை அநுவர்த்தித்தாகிலும் ரஹஸ்யார்த்தங்களை உபதேசியும்'' என்று மணக்கால் நம்பிக்கு நியமித்தருளினார்.

#### பச்சையிட்ட மணக்கால் நம்பி

சோழ நாட்டின் ஒரு பகுதியை ஆளவந்தார் (யமுனைத்துறைவர்) ஆண்டுகொண்டு தம் மனைவி மக்களுடன் ராஜபோகத்திலே திளைத்திருந்தார். தமது உண்மை ஸ்வரூபத்தை மறந்து ராஜ்ய நிர்வாகத்திலேயே மிகுந்த ஈடுபாடு கொண்டு இருந்தார். இவரைத் திருத்தி எம்பெருமானிடத்திலும் அவனது கைங்கர்யப் பணியிலும் ஈடுபடுத்த வேண்டும் என்ற தம் ஆசார்யன் உய்யகொண்டாரின் நியமனப்படி ஆளவந்தாரைக் காண அவரது அரண்மனைக்கு எழுந்தருளினார் மணக்கால் நம்பி. அங்கு கடுங்காவல் இருந்தமையால் உள்ளே புகுந்து ஆளவந்தாரைக் காண முடியாமல் வருந்தினார். பின்பு திருமடைப்பள்ளியில் ஆளவந்தாருக்குத் தளிகை பண்ணுபவரிடத்தில் ஸ்வாமி விரும்பி அமுது பண்ணும் கறியமுது தூதுவளைக்கீரை என்றறிந்தார். ஆறு மாத காலம், அக்கீரையை தினமும் மடைப்பள்ளியில் கொடுத்து வந்தும், நித்யமும் ஆளவந்தார் அதனை அமுது பண்ணும்படி செய்வித்தும் வந்தார்.

நடுவில் சில காலம் தூதுவளைக்கீரையைக் கொடுப்பதை நிறுத்தி விட்டார். ஆளவந்தார் ''தூதுவளை இல்லாமற் போனதேன்?'' என்று தளிகை செய்பவரைக் கேட்க ''ஒரு முதியவர் ஆறு மாதமாக

நாள்தோறும் கொணர்ந்து கொடுத்தார். இப்போது வரவில்லை'' என்றார். அதுகேட்டு ஆளவந்தார் ''இனியொருகால் அவர் வந்தாராகில் நமக்குத் தெரிவிப்பது'' என்றருளிச் செய்தார்.

மணக்கால் நம்பி மறுபடியும் ஆளவந்தாரை சந்திக்கும் பொருட்டு, சில நாட்கள் கழித்து தூதுவளைக் கீரையை மீண்டும் மடைப்பள்ளியில் ஸமர்ப்பித்தார். தளிகைக்காரர் நம்பியை ஆளவந்தாரின் நியமனத்திற் கேற்ப அவர் முன்னே கொண்டு நிறுத்தினார்.

ஆளவந்தார் அவரைக் கண்டு தெண்டனிட்டு, ஆஸனமளித்து ''தேவரீர் இத்தனை நாளாக நமக்குப் பச்சையிடுகிறது எதற்காக? உமக்கு வேண்டியது என்ன? அர்த்தம் வேணுமோ இல்லை க்ஷேத்ரம் வேணுமோ?'' என்று வினவ, அதற்கு மணக்கால் நம்பி ''நமக்கு ஒன்றும் வேண்டா. நாம் கொடுக்க வந்தோமேயன்றி உம்மிடத்தில் கொள்ள வந்தோமல்லோம். உமது பூர்வர்கள் தேடிவைத்த அர்த்தமிருக்கிறது. அந்த நிதி கிடக்கிறவிடமும் நானறிவேன். அதனை நீர் கைக்கொண்டருளுந்தனையும் நித்யமாக நாம் தேவரீர் பக்கல் வந்துபோம்படி அனுமதி வேணும்.'' என்றார்.

ஆளவந்தாரும் இசைய, மணக்கால் நம்பி முறையே கீதையின் பதினெட்டு அத்யாயத்தையும் மற்றும் பிற ரஹஸ்யார்த்தங்களையும் உபதேசித்து அருளிச்செய்தார். நாளாக நாளாக ஆளவந்தாருக்கு ஸம்ப்ரதாய விஷயங்களில் மிகுந்த ஈடுபாடும் எம்பெருமான் ஸ்ரீமந் நாராயணனிடத்தில் தீராக் காதலும் ஏற்பட்டதை உணர்ந்த மணக்கால் நம்பி அவரை திருவரங்கம் அழைத்துச் சென்று பெரிய பெருமாளை ஸேவிக்கச் செய்தார். ஆளவந்தார் தம் நிஜ ஸ்வரூபத்தை உணர்ந்து, அன்று முதல் உலகப் பற்று அனைத்தையும் விட்டு ஸம்ப்ரதாய பணியில் முழுவதுமாக தம்மை ஈடுபடுத்திக் கொண்டார். ஸ்வாமி மணக்கால் நம்பியும் அவரது ஆசார்யரான உய்யக்கொண்டார் அவருக்கிட்ட நியமனத்தைத் தலைக்கட்டி, அவர் குறையைத் தீர்த்து, கடலில் மறைந்திருக்கும் ரத்னத்தை வெளியில் கொண்டு வருவது போல ஸம்ஸார போகத்தில் மூழ்கியிருந்த ஆளவந்தார் என்னும் ஆசார்ய ரத்னத்தை எம்பெருமானின் இடைவிடாத கைங்கர்யத்தில் ஈடுபடுத்தி ப்ரகாசப்படுத்தினார்.

ஸ்வாமி தேசிகன் ஸ்ரீ மணக்கால் நம்பியை இப்பூவுலகில் அவதரித்த நான்காவது இராமன் என்று ஏற்றிப் பேசுகிறார்.

*அநுஜ்ஜிதக்ஷமாயோகம் அபுண்யஜநபாதகம் ||*
*அஸ்ப்ருஷ்டமதராகம் தம் ராமம் துர்யமுபாஸ்மஹே ||*
(ஸ்ரீ யதிராஜ ஸப்ததி - 7)

''பொறுமையின் தொடர்பை என்றும் விடாதிருந்தும், புண்ய ஜனங்களுக்கு என்றுமே அநுகூலராய் இருந்தும், மதராகங்களை அறவே துறந்தும் – ஆகையாலே இம்மூன்று குணங்களினாலே முறையே மூன்று ராமர்களான பரசுராமன், தசரதராமன் மற்றும் பலராமன் ஆகிய மூவரை விட வேறுபட்ட தன்மைகளைக் கொண்ட நான்காவது ராமனாக விளங்குகிறார் மணக்கால் நம்பி. அவரை மறவாது அவர் திருவடிகளை என்றும் ஆச்ரயித்திருப்போம்'' என்று ஸாதிக்கிறார் நம் தூப்புல் வள்ளல்.

ஸ்வாமி தேசிகன் காட்டியபடி நான்காம் ராமனான ஸ்வாமி மணக்கால் நம்பியின் திருவடிகளை நாமும் ஆச்ரயிப்போமாக! ❊


## ஆஸ்திகர்கள் கவனத்திற்கு

பரமபத ப்ராப்தி அடைந்தவர்களுக்கு 12 நாட்கள் வரையிலான கைங்கர்யங்களைச் செய்யும் வகையில், ஆறு பகுதிகளுடன், நம் தேவஸ்தானத்தின் **'ஸ்ரீ வேங்கடேச தீர்த்தம்'** தை மாதம் முதல் இயங்கி வருகிறது.




**முகவரி மற்றும் விவரங்களுக்கு:**
**'ஸ்ரீ வேங்கடேச தீர்த்தம்'**
9/5, வேங்கடேச அக்ரஹாரம் தெரு,
மயிலாப்பூர், சென்னை – 600004. போன்:
044 – 4322 9401.

**நிர்வாகம்:**
ஸ்ரீ வேதாந்த தேசிகர் தேவஸ்தானம்,
மயிலாப்பூர், சென்னை – 600004.

**Sponsorships and donations towards publication expenses are welcome**

ஶ்ரீ:



*With Pranams:*

# Aravind Laboratories

Eyetex Dazller & Dazller Eterna

**SVDD thanks Sri Aravind Laboratories**
for sponsoring this month's issue of Desika Sandesam






வனபோஜன உத்ஸவம்








கனு சேர்த்தி உத்ஸவம் - ஆஸ்தானம்